# வழிபாடு : யாமிருக்கப் பயமேன்

தனஞ்செயன்

கையில் வேலேந்தும் குழந்தை முருகன்
கொடும்பகை நெருங்காமல்
எம்மை என்றுங்
காத்தருள் செய்கிறான்.

பால் வழியும் அவன் முகத்தில்
தவழும் மென் சிரிப்பும்
பிஞ்சுக் கைகளில் ஆயுதமும் கண்டால்
உள்ளமுருகுதைய்யா.

ஆயிரமாம் இடம் பெயர்ந்து
பலநூறாய் கொலையுறினும்
எஞ்சியிருக்கும் எவர் எவரோ வயிற்றில்
எம் முருகன் பிறக்கிறான்.

கொடும்போர் வெடித்து ஊரழிந்தாலும்
எம் பிள்ளைகள் உயிர் தப்பி
கடல்தாண்டி சீரோடுவாழ
குழந்தை வேல்முருகன் அருள்புரிந்தான்.

இன்று பேரன் பேத்தியுடன் நாம்
வெளிநாட்டினில் கொஞ்சிக்குலவி
ஊர்நினைவுகளை அசைபோடுவதற்காய்
குழந்தை வேல்முருகன் போர் புரிகின்றான்.

நாளை எம் சந்ததி அழியாது
அமைதியுடன் வாழவும்
எம் இனப்பெருமையை
உலகறியச் செய்யவும்
பாலமுருகன் கைகளில்
வேல்கள் கொடுப்போம்
அவனிருக்கப்பயமேன்

பால் வழியும் முகத்தில்
தவழும் மென் சிரிப்பும்
பிஞ்சுக் கைகளில் ஆயுதமும் கண்டால்
உள்ளமுருகுதய்யா.